www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2024

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண் : [ ]

## தமிழ்

நேரம் : 3.00 மணி

பகுதி - I

மதிப்பெண்கள் : 90

14 x 1 = 14

குறிப்பு : I) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.
II) கொடுக்கப்பட்ட நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடை விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுக்க.
   அ) அ.முத்துலிங்கம் - யுகத்தின் பாடல்
   ஆ) பவணந்தி முனிவர் - நன்னூல்
   இ) க.விலவரத்தினம் - ஆறாம் திணை
   ஈ) இந்திரன் - பேச்சு மொழியும் கவிதை மொழியும்

2. மொழி முதல் எழுத்துகளின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடிக்க.
   அ) அன்னம், கிண்ணம் ஆ) டமாரம், இரண்டணம்
   இ) ரூபாய், லட்சாதிபதி ஈ) தெக்காண், அங்ஙனம்

3. காவடிச்சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?
   அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார்
   இ) முருகன் ஈ) பாரதியார்

4. துன்பப்படுபவர் ______.
   அ) தீக்காயம் பட்டவர் ஆ) தீயினால் சுட்டவர்
   இ) பொருளைக் காக்காதவர் ஈ) நாவைக் காக்காதவர்

5. ஒப்புரவு என்பதன் பொருள் ______.
   அ) அடக்கமுடையது ஆ) பண்புடையது
   இ) ஊருக்கு உதவுவது ஈ) செல்வமுடையது

6. 'இனிதென' - இச்சொல்லில் அமைந்த புணர்ச்சி விதிகளை வரிசைப்படுத்துக.
   அ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே
   ஆ) தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும், உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்
   இ) உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே, தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்
   ஈ) தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும், உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்

7. பகுபத உறுப்புகளுள் இடம்பெறும் அடிப்படை உறுப்புகள் எவை?
   அ) பகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகுதி, விகாரம்
   ஆ) பகுதி, இடைநிலை, சாரியை
   இ) பகுதி, சந்தி, விகாரம்
   ஈ) பகுதி, விகுதி

8. பொருத்தமான இலக்கிய வடிவம் எது?
   அ) ஏதிலிக்குருவிகள் - மரபுக்கவிதை ஆ) திருமலை முருகன் பள்ளு - சிறுகதை
   இ) யானை டாக்டர் - குறும்புதினம் ஈ) ஐங்குறுநூறு - புதுக்கவிதை

9. மண்ணுக்கு வளம் சேர்ப்பன ______.
   அ) மண்புழு ஆ) ஊடுபயிர் இ) இயற்கை உரங்கள் ஈ) இவை மூன்றும்

Scanned with CamScanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



10. ஏடு, சுவடி, பொத்தகம், பனுவல் முதலிய சொற்கள் தரும் பொருள் ______ என்பதாகும்.
அ) நூல் ஆ) ஓலை இ) எழுத்தாணி ஈ) தாள்

11. 9 அடி சிற்றெல்லையும் 12 அடி பேரெல்லையும் கொண்ட நூல்
அ) நற்றிணை ஆ) குறுந்தொகை இ) அகநானூறு ஈ) ஐங்குறுநூறு

12. தொல்காப்பியத்திலுள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை
அ) 9 ஆ) 3 இ) 27 ஈ) 13

13. ஆனந்தரங்கருக்குத் தொடர்பில்லாத குறிப்பு எது?
அ) மொழிபெயர்ப்பாளர் ஆ) இந்தியாவின் பெப்பிசு
இ) தலைமைத் துவிபாஷி ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை

14. புதுக்கவிதை இயக்கத்தைத் தோற்றுவித்தவர்
அ) வால்ட் விட்மன் ஆ) ஸ்டெஃபான் மல்லார்மே
இ) பாப்லோ நெருடா ஈ) இந்திரன்

## பகுதி - II

### பிரிவு - 1

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக. 3 x 2 = 6

15. 'பாயிரம்' பற்றி நீங்கள் அறியும் கருத்து யாது?
16. ஏதிலியாய்க் குருவிகள் எங்கே போயின - தொடரின் பொருள் யாது?
17. இங்கே, ஐம்பதாண்டு வேம்பு
கோடையில் கொட்டும் பூக்களை எண்ணச் சொல்கிறார்கள்
- எண்ணச் சொல்கிறவர்கள் யார்? எண்ணுபவர்கள் யார்?
18. தமிழர்கள் புகழ், பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?

### பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும். 2 x 2 = 4

19. பேச்சு மொழி, எழுத்து மொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது. ஏன்?
20. தமிழ்நாட்டின் மாநில மரம் - சிறுகுறிப்பு வரைக.
21. ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

### பிரிவு - 3

எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். 7 x 2 = 14

22. உயிரீறு, மெய்யீறு - விளக்குக.
23. *பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.*
அ) காலங்காத்தால எந்திரிச்சிப் படிச்சா ஒரு தெளிவு கெடைக்கும்.
ஆ) முயற்சி செஞ்சா அதுக்கேத்த பலன் வராமப் போவாது.
24. *தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.*
அ) ஓர் பயிர் பறவை வளர வேண்டும் அழகான தண்ணீர் மயில்
ஆ) பள்ளிக்கூடம் எல்லாம் தருபவை ஒவ்வொரு கலைகள் குழந்தையும் போகவேண்டும் மகிழ்ச்சி
25. *ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.*
அ) வைத்தார் ஆ) மலிந்த
26. *ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.*
அ) அணிந்துரை ஆ) சிறுகோல்

Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



27. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
உலை, உளை, உழை
28. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.
அ) கால்நடை ஆ) தங்கை
29. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
அ) அனைத்துத் துறைகளிலும் ஆண்களை போலவே பெண்களும் அரசு பணியை பெற வேண்டும்.
ஆ) கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மைத் தீமைகளை புரிந்து பேசுவர்.
30. புதிர்களுக்கான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
(கம்பு, மை, வளை, மதி)
அ) எலியும் நுழையும் ; எழிலரசி கையும் நுழையும் ______.
ஆ) அடிக்கவும் செய்யலாம் ; கோடைக்குக் கூழாகவும் குடிக்கலாம் ______.

## பகுதி - III

### பிரிவு - 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. 2 x 4 = 8
31. க.வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?
32. காற்றில் ஆடும் புல் வீடுகளுக்கு அழகிய பெரியவர் தரும் ஒப்பீடு யாது? ஏன்?
33. "ஏவல் மறுக்கும் சிறுவிளையாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள் கொல்"
- இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
34. புகழுக்குரிய பண்புகளாக நீவிர் கருதுவன யாவை? புகழின் பெருமையைப் பொதுமறை வழிநின்று கூறுக.

### பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. 2 x 4 = 8
35. வேதிக் கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? - நும் கருத்தை எழுதுக.
36. தமிழ் இலக்கியங்களில் கல்வி குறித்து நீங்கள் அறிந்த செய்திகளை அட்டவணைப்படுத்துக.
37. ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதிவழி எடுத்துக்காட்டுக.
38. 'என்னுயிர் தமிழ் மொழி என்போன்' என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப்பற்றினை எழுதுக.

### பிரிவு - 3

எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக. 3 x 4 = 12
39. அ) சொற்பொருள் பின்வருநிலையணியை விளக்குக.
(அல்லது)
ஆ) இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து
- இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.
40. அ) பொதுவியல் திணையைச் சான்றுடன் விளக்குக.
(அல்லது)
ஆ) மகள் நிலை உரைத்தல் துறையைச் சான்றுடன் விளக்குக.

Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



41. இலக்கிய நயம் பாராட்டுக

மீன்கள் கோடி கோடி சூழ வெண்ணிலாவே! ஒரு
வெள்ளிஓடம்போல வரும் வெண்ணிலாவே!

வளர்ந்து வளர்ந்து வந்த வெண்ணிலாவே! மீண்டும்
வாடி வாடிப் போவதேனோ? வெண்ணிலாவே!

கூகை ஆந்தை போல நீயும் வெண்ணிலாவே! பகல்
கூட்டினில் உறங்குவாயோ? வெண்ணிலாவே!

பந்தடிப்போம் உன்னையென்று வெண்ணிலாவே! நீயும்
பாலர் அஞ்சினையோ? வெண்ணிலாவே!

- கவிமணி

42. தமிழாக்கம் தருக.

1) The pen is mightier than the sword.
2) Winners don't do different things, they do things differently.
3) A picture is worth a thousand words.
4) Work while you work and play while you play.

43. பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி எழுதுக.

அ) ஒன்று பட்டால் உண்டு வாழ்வு

(அல்லது)

ஆ) தன் கையே தனக்குதவி.

## பகுதி - IV

3 x 6 = 18

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

44. அ) நன்னூல் பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் வாயிலாக அறியலாகும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

ஆ) "அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும்" - இக்கூற்றை முப்பால் வழி விளக்குக.

45. அ) சுற்றுச்சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மையே என்னும் தலைப்பில் மேடைப்பேச்சிற்கான உரையை உருவாக்குக.

(அல்லது)

ஆ) தாம் வாழ்ந்த காலகட்டத்தின் நாகரிகப் புதையலாக நாட்குறிப்பைப் பயன்படுத்தியவர் ஆனந்தரங்கர் என்பதை நிறுவுக.

46. அ) பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை?

(அல்லது)

ஆ) தமிழர், வாழ்வோடு புலம்பெயர் நிகழ்வுகளோடும் அ.முத்துலிங்கத்தின் திணைப் பாகுபாடு எவ்வாறு இணைக்கப்படுகிறது?

## பகுதி - V

4 + 2 = 6

47. அடிபிறழாமல் எழுதுக.

அ) "ஏடு தொடக்கி வைத்து என்னம்மை எனத் தொடங்கும் யுகத்தின் பாடலை எழுதுக.

ஆ) தோன்றின் எனத் தொடங்கும் குறளை எழுதுக.

******

Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com